


**எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும்**
**செழுமையை பெற்றுத்தர**
**நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம்.**
**நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க**
**விரும்புகிறீர்களா ???**

**பிரதேச அபிவிருத்தி வங்கி**

# திறமைமிக்க இளைஞர் யுவதிகளுக்கான
# பிரதேச அபிவிருத்தி வங்கியின் தொழில் வாய்ப்பு

இலங்கையின் முன்னணி அரசுரிமை அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கி நாடு முழுவதிலும் 272 கிளை வலையமைப்புகளையும் 3000 இற்கும் மேற்பட்ட மனிதவள வலுவையும் கொண்டுள்ளது என்பதுடன் பின்வரும் பதவிக்கு பொருத்தமான தகைமை மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆற்றல் மிக்க மற்றும் பெறுபேறுகள் சார்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பயிலுனர் வங்கி உதவியாளர்

### I) தேவையான தகைமைகள்

தாய்மொழி (தமிழ்/சிங்களம்) மற்றும் கணிதம் உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் (05) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் 03 பாடங்களில் (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

க.பொ.த உ/த பரீட்சையில் பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். கணணி பிரயோகம் மற்றும் தாய் மொழிக்கு மேலதிகமாக இரண்டாம் மொழியில் கடமையாற்றும் திறமை ஆகியன மேலதிக தகமைகளாக கருதப்படும்.

மேலும் கிராமிய மற்றும் சமூக சேவைகளில் ஈடுபாட்டுடன் செயலாற்றியுள்ள இளைஞர் யுவதிகள் தொடர்பில் நேர்முக தேர்வின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

### II) வயது

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு உட்பட்டவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 2007.05.18 திகதியில் அல்லது அதற்கு முன்னரும் 2001.05.18 திகதியில் அல்லது அதற்கு பின்னர் பிறந்ததினத்தை உடையவரால் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.)

### III) விண்ணப்பபடிவங்களை அனுப்புதல்

விண்ணப்பப்படிவங்களை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையதளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications Exams /E.B.recruitment Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் அவ் விண்ணப்ப படிவத்தை நிகழ்நிலை (On line) முறைப்படி மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பபடிவத்தை பாரமேற்பது 2025 மே மாதம் 19ம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பிப்பதுடன் 2025 ஜுன் மாதம் 19ம் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவுறும்.

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்ப படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பதாரியால் நிகழ்நிலை முறைப்படி விண்ணப்பிக்கப்பட்ட மென்பிரதியானது செல்லுபடியாகும் விண்ணப்ப படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக/ ஏற்றுக்கொள்ளப்படாததாக கட்டமைப்பிற்கு உட்பிரவேசிக்கப் பயன்படுத்திய கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலாக (SMS) அல்லது மின்னஞ்சலாகவோ (E-mail) அறிவிக்கப்படும்.

நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்ய முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் பத்திரத்தினை (Instructions) தரவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ் அறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றுங்கள். பூரணமற்ற விண்ணப்ப படிவம் அறிவித்தல்களேதுமின்றி நிராகரிக்கப்படும்.

### IV) பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்

பரீட்சைக் கட்டணம் ரூ.600/= ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலைக் கட்டமைப்பினால் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரமே கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card)

II. இணையதள கொடுப்பனவு வசதியுடனான எந்தவொரு வங்கி வரவு அட்டை மூலமாகவும் (Any Bank Debit Card with the Facility of Internet Banking)

III. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கிக் கொடுப்பனவு முறை (Online Banking Method of Bank of Ceylon)

IV. எந்தவொரு இலங்கை வங்கி கிளையொன்றின் மூலமும் (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு**

அ. மேற்கூறிய முறைகளின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வழிகள் தொடர்பிலான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ஆ. கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்றதாக குறுந்தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சலொன்று மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுத் தொகையினையும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்படும் விண்ணப்ப படிவம் நிராகரிக்கப்படும். மேற்கூறிய கொடுப்பனவு முறையின் கீழ் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூறமாட்டாது.

இ. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ மாட்டாது.

ஈ. மேற்கூறிய ரூ.600/= இற்கு மேலதிகமாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் பரீட்சைக் கட்டணம் பொறுப்பேற்கப்படும் கணக்கிலக்கம் 134012000201 இன் கீழ் எந்தவொரு பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளையில் மாத்திரம் பரீட்சைக் கட்டணமாக ரூ.1000/= இலான தொகையினை வைப்புச் செய்தல் வேண்டும். பணம் வைப்புச் செய்யப்பட்ட பின்னர் வழங்கப்படும் பற்றுச்சீட்டினை உங்கள் வசம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளல் வேண்டும்.

### V) தெரிவு செய்யும் முறை

மேற்படி பதவிக்கு தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போட்டி எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முக தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர். எழுத்துப் பரீட்சை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் இடம்பெறும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

| விடயம் | காலம் | மொழி | புள்ளிகள் | பெறுபேறு |
|---|---|---|---|---|
| பகுப்பாய்வு திறமை/நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | 100 | 40 |
| பொது அறிவு | 01 மணித்தியாலம் | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | 100 | 40 |

**குறிப்பு**

மேற்கூறிய பரீட்சையில் சித்தியடையும் தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படும். மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவதுடன் 2025 ஜீன் 19ம் திகதிக்கு அம்மாவட்டத்தில் குறைந்த பட்சம் அண்மித்த 05 வருட காலம் நிலையான வதிவாளராக இருத்தல் வேண்டும்.

### VI) பதவியில் அமர்த்தல் மற்றும் சேவை நிபந்தனைகள்

இந்நியமனம் இரு வருட பயிற்சிக் காலத்திற்கு உட்படும். இரு வருட பயிற்சிக் காலத்தின் பின்னர் தகுதி பெறுபவர்கள் அப்பதவியில் ஒரு வருட கால தகுதிகாண் பருவநிலைக்கு உட்படுவர். பயிற்சிக் காலப்பகுதியில் செயற்திறன் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் சேவையில் நிரந்தரமாக்கும் போது இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் பிரயோக வங்கி மற்றும் இடைநிலை நிதியியல் பரீட்சையில் சித்தியடைதல் அல்லது இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் நிதியியல் டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைதல் கவனத்திற்கொள்ளப்படும்.

### VII) சம்பள அளவுத்திட்டம்

பயிற்சிக் காலத்தின் முதலாம் வருடத்தினுள் ரூபா.55,000/- மாதாந்த நிலையான கொடுப்பனவாக செலுத்தப்படும் என்பதுடன் இரண்டாம் வருடத்தினுள் ரூபா.70,000/- மாதாந்த கொடுப்பனவாக செலுத்தப்படும். வெற்றிகரமாக இருவருட பயிற்சிக் காலத்தினை பூர்த்தி செய்பவர்கள் வங்கி உதவியாளர் தரம் 5-1 தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதுடன் ஆரம்ப அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம் (ரூபா 64,025-400X20-72,025) என்றவாறாகும். இதற்கு மேலதிகமாக வங்கியின் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் உரித்தாகுவர்

### VIII) அனுமதி அட்டை

பத்திரிக்கை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளையுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் எனும் முடிவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்படும், விண்ணப்ப படிவம் பாரமேற்கும் இறுதித்திகதியில் அல்லது அத்திகதிக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக்கட்டணத்தினை செலுத்தி சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரிக்கு பரீட்சைகள் ஆணையாளரினால் பரீட்சை அனுமதி அட்டை நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரம் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அதுதொடர்பாக குறிப்பிட்டு இணையத்தள அறிவித்தலொன்று மூலம் அல்லது விண்ணப்பதாரிகளுக்கு குறுந்தகவல் மூலமாகவோ அறிவிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுதொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஏற்பாட்டு கிளையிடம் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தே.அ.அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிடவேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியில் வதிவிடத்தைக் கொண்டவராயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியினை துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடியவாறாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றினையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்து விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவல் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்தின் நகல் பிரதியொன்றினையும் (Screen shot) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு நகல் பிரதியொன்றினையும் கைவசம் வைத்துக்கொள்வது பயனளிக்கும். அபேட்சகருக்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகித்தலானது அவர் பரீட்சைக்கு சமுகமளிக்கவோ அல்லது பதவிக்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதாகவோ ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படமாட்டாது.

விசாரணைகளுக்கு நிறுவன பரீட்சைகள் ஏற்பாட்டு கிளை, தொ.இல - 0112-785230, தொலை நகல் - 0112-784232.

### IX) அடையாளத்தை உறுதிப்படுத்துதல்.

பரீட்சை அபேட்சகர் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பரீட்சைகளுக்காகவும் மண்டப அதிகாரி திருப்திகொள்ளும் வகையில் இயல்பாக ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் வகையில் அமையவேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

I. தேசிய ஆள் அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகளின் அடையாளத்தை உறுதிசெய்யும் பொருட்டு முகம் மற்றும் மின்னியல் சாதனங்கள் பொருத்தப்பட்டில்லை என்பதை உறுதி செய்துகொள்ளும் வகையில் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசிக்கவேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிசெய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரியினை பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படாது. மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் இரு காதுகளை மூடாது இருக்கவேண்டும்.

பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்படுவர். அச் சட்ட விதிமுறைகளை மீறுபவர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

சிங்கள / தமிழ் / ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தல்களில் மொழிகளிடையே ஏதேனும் பொருத்தமின்மைகள் காணப்படின் சிங்கள மொழிமூல அறிவித்தலிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவிதமான அழுத்தங்கள் அல்லது தவறான தகவல்களை வழங்குவது இப்பதவிக்கு தெரிவு செய்வதற்கு தகுதியற்றதாகி விடும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைத்தல், ஆட்சேர்த்தலை ஒத்திவைத்தல் அல்லது இரத்து செய்யும் உரிமை வங்கிக்கே உரியது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

**பிரதான மனிதவள அதிகாரி**
**பிரதேச அபிவிருத்தி வங்கி.**
**இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.**
**0112 03 54 54 | www.rdb.lk |**